**தேதி :** 06.11.2025 **SC.No. :** 16/2025 **PW : 1** ராஜேஷ்

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். சம்பவயிடத்திற்கும், காவல்நிலையத்திற்குமிடையே 1 கி.மீ தூரம் இருக்குமா? என்றால் ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் இருக்கும். சம்பவயிடத்திலிருந்து 5 நிமிடத்தில் அரசு மருத்துவமனைக்கு சென்று விடலாம் என்றால் 15 நிமிடத்தில் சென்று விடலாம். நான் சம்பவம் நடந்தவுடன் நான் மருத்துவமனைக்கு சென்றேனா? என்றால் போக்கு ஆட்டோவை மறித்து சென்றேன். சட்டையில் குத்துப்பட்ட அடையாளம் இருந்தது என்றால் சரிதான். அந்த சட்டையை போலீசில் ஒப்படைத்தேனா? என்றால் இல்லை. சட்டையில் குத்துப்பட்ட அடையாளம் இல்லை என்பதினால், நான் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு காயம் இல்லை என்பதினால் தான் சட்டையை ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய தகப்பனார் சம்பவ சமயத்தில் சட்டை போட்டிருந்தார் என்றால் சரிதான். அவருடைய சட்டை கிழிந்திருந்தது என்றாலும், இரத்தம் பட்டிருந்தது என்றாலும் சரிதான். என்னுடைய தந்தை சட்டையை ஒப்படைத்தாரா? என்றால் அது எனக்கு தெரியாது. நான் சிகிச்சையில் இருந்தேன். எனது அப்பாவின் சட்டையில் குத்துப்பட்ட அடையாளம் இல்லை என்பதினால், அதனை எனது அப்பா ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. காலை 08.00 மணிக்குள்ள சண்டையை குறித்து நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா? என்றால் மாமாதானே என்று விட்டுவிட்டேன். அவ்வாறு ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்பதினால்

தான் நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் மீது கஞ்சா கேஸ் ஒன்று நிலுவையில் உள்ளது. சாட்சி கணேசன் என்னுடைய சித்தப்பா என்றால் சரிதான். நான் தென்காசியில் முதலுதவி சிகிச்சை பெற்று விட்டு, திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சுமார் 07.00 – 07.30 மணியளவில் கிளம்பினேன். போலீசார் என்னை திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள் என்றால் தென்காசி மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். யார் விசாரித்தார் என்றால் எஸ்.ஐ, இன்ஸ்பெக்டர் விசாரித்தார். என்னுடைய அப்பா புகார் வாக்குமூலம் கொடுத்தார். என் அப்பா சொல்லச் சொல்ல புகார் வாக்குமூலத்தை ரைட்டர் எழுதினார். நானும், என்னுடைய அப்பாவும் எதிரியை தடுக்க முயற்சி செய்யவில்லையா? என்றால் எதிரி ஓடி வந்து கெட்ட வார்த்தை பேசி விட்டு, கத்தியால் குத்தினார். தடுக்க வந்த என் அப்பாவையும் குத்தினார். எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. எதிரி கத்தியால் குத்தவில்லை என்றால் சரியல்ல. சம்பவயிடத்தில் ரிலையன்ஸ் பெட்ரோல் பல்க், பரணி சில்க்ஸ் கடை, மூன் லைட் கடை உள்ளது என்றால் சரிதான். மூன் லைட் கடைக்கு எதிரே வைத்து தான் சம்பவம் நடந்தது. சம்பவயிடம் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள போக்குவரத்து நிறைந்த பகுதி என்றால் சரிதான். ஆனால், சம்பவம் ஓரமாக நடந்தது. நான் போலீசார் விசாரணையில் ஓரமாக நடந்தது என்று சொல்லியுள்ளேனா? என்றால் பல்க் அருகே நடந்தது என்று சொல்லியுள்ளேன். சம்பவயிடத்தில் செருப்பு கிடந்ததாக சொல்லியது பொய் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் வைத்து சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. எனக்கும், எதிரிக்கும் இருந்த தொழில் போட்டி காரணமாக அவரை கஷ்டப்படுத்த வேண்டும் என்றும், பழிவாங்க வேண்டும் என்ற உள் நோக்கத்தோடு எனக்கும், என்

அப்பாவுக்கும் வேறு விதத்தில் ஏற்பட்ட காயத்தினை பயன்படுத்தி எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்து, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி மீது எனது தகப்பனார் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக வேறு விதத்தில் குப்புற விழுந்த காயத்தை வைத்துக்கொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.09 14:05:41 +0530

**தேதி :** 06.11.2025 **SC.No. :** 16/2025 **PW : 5** **கணேசன்**

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

தற்போது சாட்சியம் அளித்து விட்டு சென்றது எனது அண்ணன் மகன் என்றால் சரிதான். சம்பவம் பற்றி கேள்விபடும் போது, மாலை 06.30 மணியிருக்கும். என்னுடைய அண்ணனின் மொபைலில் இருந்து யாரோ ஒரு நபர் கூப்பிட்டார். நான் நீதிமன்றத்தில் சொல்லியுள்ளவாறு தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். போலீசார் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். பின்னர் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் எனது உறவினர்கள் என்பதினால் எழுதாத வெள்ளைப் பேப்பரில் கையெழுத்து செய்து விட்டு, எனது சகோதரர் மற்றும் சகோதரரின் மகனுக்காக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கேள்விபட்டேன் என்று சொல்வதெல்லாம் பொய் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.09 14:05:53 +0530